**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி,</u>**

**<u>திருவண்ணாமலை மாவட்டம்</u>**.

முன்னிலை- **திருமதி. செ. மகாலட்சுமி, பி.ஏ., எம்.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, வந்தவாசி.

<u>(திருவள்ளுவர் ஆண்டு 2057 பரபாவ, வருடம் சித்திரை மாதம் 4ஆம் நாள்)</u>

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 17ஆம் நாள் வெள்ளிக் கிழமை

**<u>அசல் வழக்கு எண். 158/2013</u>**

**<u>CNR No.TNTM16-000368-2013</u>**

நீலாம்பாள் ....வாதி

... எதிர் ...

1. முனுசாமி
2. கே. சுலோக்சனா
3. என். சந்திரா
4. ப்பி. பூங்காவனம்
5. சி. மங்கை
6. கே. சேகர் .....பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 17.02.2026 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கே. விஸ்வநாதன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4, 6 பிரதிவாதிகளை அழைத்து வருகையின்மையால் அவர்களை பொறுத்து தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், 5ஆம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டும், வாதியின் வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

**<u>தீர்ப்புரை</u>**

தாவா செட்டியுல் சொத்துக்களில் வாதிக்குரிய 1/3 பாகத்தை தக்க முறையில் ஈடுதாழ்த்தி பார்த்து பிரித்துக் கொள்ள 2,3,4,5 பிரதிவாதிகள் பேரில் ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும், அவ்வாறு தாவா செட்டியுல்

சொத்துக்களில் வாதிக்குரிய 1/3 பாகத்தை தக்க முறையில் ஈடுதாழ்த்திப் பார்த்து பிரித்துக் கொள்ள 2,3,4,5 பிரதிவாதிகள் உடன்படாத பட்சத்தில் கனம் கோர்ட்டார் அவர்களே ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து நிலம் தகிடு பார்த்து ஈடுதாழ்த்திப் பார்த்து தாவா செட்டியுல் சொத்துக்களில் வாதிக்குரிய 1/3 பாகத்தை தக்க முறையில் ஈடுதாழ்த்தி பார்த்து பிரித்து கொள்ள 2,3,4,5 பிரதிவாதிகள் பேரில் ஒரு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், வாதி மற்றும் 2,3,4,5 பிரதிவாதிகள் இடையே தக்க பாகப்பிரிவினை முடிவடையும் வரை தாவா செட்டியுல் சொத்துக்களை குறித்து 1ம் பிரதிவாதி எவருக்கும் யாதொரு பராதீனமும் செய்யக் கூடாது என ஒரு நிரந்தர தடையுத்தரவு பிறப்பிக்கக்கோரியும், 1ம் பிரதிவாதி வாதியின் பாகத்தை ஏமாற்றி மற்ற பாகஸ்தர்களிடம் போர்ஜரியாக கிரய ஆவணம் ஏற்படுத்திய 27.10.1992 தேதியிட்ட கிரய ஆவணம் சட்டப்படி செல்லாது என டிக்ளேர் செய்யும்படிக்கும், தாவா செலவுத் தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 02. <u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :</u> -

**2.1)** வாதி தெரிவித்து கொள்வது யாதெனில், தாவா சொத்து ஆதியில் ஒரு பெருமாள் பிள்ளை என்பவருக்கு சொந்தமான சுயார்ஜித சொத்துக்கள் என்றும், அவருக்கு வாதி, யசோதா அம்மாள், 5ம் பிரதிவாதி ஆகிய மூன்று மகள்கள் என்றும், 1ம் பிரதிவாதி யசோதா அம்மாளின் கணவர் என்றும், 2,3,4 பிரதிவாதிகள் யசோதா அம்மாளின் மக்கள் என்றும், மேற்படி யசோதா அம்மாள் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும், மேற்சொன்ன பெருமாள் பிள்ளை தாவா சொத்துக்கள் குறித்து எவ்வித ஏற்பாடும் செய்யாமல் 30.05.1969 தேதியன்று இறந்துவிட்டார் என்றும், அவருடைய வாரிசுகள் என்ற முறையில் வாதியும், 5ம் பிரதிவாதியும், இறந்த யசோதா அம்மாளின் மக்களான 2,3,4 பிரதிவாதிகளும், அவருடைய கணவரான 1ம் பிரதிவாதியும் கூட்டாக எவ்வித பாகப் பிரிவினையும் செய்துக் கொள்ளாமல் இதுநாள் வரை

ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றும், 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், இருப்பினும் யசோதா அம்மாளின் கணவர் என்ற முறையிலும், தனக்கு உரிமையில்லாத தாவா சொத்துக்களை 6ம் பிரதிவாதிக்கு போக்கிய ஆவணம் ஏற்படுத்தியுள்ளதாலும், மேலும் தாவா சொத்துக்களை விற்பனை ஆவணம் ஏற்படுத்த உடந்தையாக இருந்ததாலும் அவர் இந்த வழக்கில் அவசிய பார்ட்டியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், இறந்த பெருமாள் பிள்ளையின் மனைவி உண்ணாமலை அம்மாள் தாவா சொத்துக்களை தன்னுடைய மகள்களுடன் கூட்டாக அனுபவித்து வந்து கடந்த 1 1/2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார் என்றும், எனவே வாதி 2,3,4,5 பிரதிவாதிகள் ஆகிய அனைவரும் இந்து அபிபக்த கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் என்றும், எனவே தாவா சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகமும், 2,3,4 பிரதிவாதிகளுக்கு 1/3 பாகமும், 5ம் பிரதிவாதிக்கு 1/3 பாகமும் உரிமையுண்டு என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**2.2)** தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லாத 1ம் பிரதிவாதி 27.10.1992ல் தாவா சொத்துக்களின் பாகஸ்தரான இறந்த உண்ணாமலை அம்மாள், 1ம் பிரதிவாதியின் மனைவி யசோதா அம்மாள், 5ம் பிரதிவாதி ஆகியோரிடமிருந்து தாவா சொத்துக்களில் சில சொத்துக்களை கிரயம் பெற்றார் என்றும், அந்த கிரயப் பத்திரம் தாவா சொத்துக்களின் மற்றொரு பாகஸ்தரரான வாதிக்கு தெரியாமல் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், வாதி பார்ட்டியாக இல்லாத மேற்படி 27.10.1992 தேதியிட்ட கிரயப் பத்திரம் சட்டப்படி செல்லாது என்றும், அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும், மேற்படி கிரயத்தை அனுகூலமாக்கிக் கொண்டு 1ம் பிரதிவாதி 08.05.2003-ல் தன்னுடைய மகளான என். சந்திராவின் மைனர் மகனான கார்த்திகேயன் என்பவருக்கு கார்டினாக தன் மருமகனை நியமித்து போர்ஜரியாக ஒரு கிரயப் பத்திரத்தை உருவாக்கியுள்ளார், அந்த கிரயப்பத்திரமும் சட்டப்படி செல்லாது, வாதியை கட்டுப்படுத்தாது என்றும் தாவா சொத்துக்களின் வாரிசுதாரர்கள்

அனைவரும் பெண்கள் என்பதால் அதை அனுகூலமாக்கிக் கொண்டு மோசடியாக 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்கள் குறித்து பட்டா அனைத்தையும் வருவாய் துறை மூலமாக தன் பெயருக்கு மாற்றியுள்ளார் என்றும், அது சட்டப்படி செல்லாது என்றும், 1ம் பிரதிவாதி மேற்கூறிய கிரயங்களை அனுகூலமாக்கிக் கொண்டு தாவா சொத்துக்களை 6ம் பிரதிவாதிக்கு போக்கியம் வைத்துள்ளதாக வாதி அறிகிறார் என்றும், உண்மை நிலை அறியாமல் 6ம் பிரதிவாதி தாவா சொத்தை போக்கியம் பெற்றுள்ளார் என்றும், இந்த போக்கிய ஆவணமும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், இது வாதியை கட்டுப்படுத்தாது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**2.3)** தாவா சொத்துக்களில் வாதிக்குரிய பாக உரிமையை மறைத்து அவருடைய பாகத்தையும் சேர்த்து அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் 1ம் பிரதிவாதி மேற்சொன்ன வகைகளில் செயல்பட்டிருப்பதால் 1,6 பிரதிவாதிகளின் செயல்கள் நில அபகரிப்பு சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் என்றும், இந்த நிலையில் வாதி 2,3,4,5 பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவிக்க விரும்பவில்லை என்றும், எனவே வாதி 2,3,4,5 பிரதிவாதிகளை அணுகி தாவா சொத்துக்களில் தனக்குரிய 1/3 பாகத்தை பிரித்துக் கொள்ள உடன்படுமாறு கேட்டுக் கொண்டார் என்றும், அதற்கு 2,3,4,5 பிரதிவாதிகள் தக்க பதில் கூறாமலும், உரிய பாகப் பிரிவினைக்கு உடன்படாமலும் இருந்து வந்தனர் என்றும், எனவே தாவா சொத்துக்களில் வாதி தனக்குரிய 1/3 பாகத்தை பிரித்துக் கொடுக்க வலியுறுத்தி 12.03.2012ல் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார் என்றும், அதை பெற்றுக் கொண்ட பிரதிவாதிகள் 09.04.2012ல் தவறாக சங்கதிகளை கொண்டு ஒரு வழக்கறிஞர் பதில் அறிவிப்பினை அனுப்பியுள்ளார்கள் என்றும், அதில் வாதி தனக்குரிய பாகத்தை ரூ.70,000/- பிரதிவாதிகளிடம் ரொக்கமாய் பெற்றுக் கொண்டு வாச்சாவாக அவருடைய பாக உரிமையை விடுதலை செய்துக் கொடுத்துவிட்டார் என்றும், உறவுமுறை காரணமாக பத்திரம் எதுவும்

எழுதவில்லை என்றும் பதில் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது என்றும், அந்த சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை, சட்டத்திற்கு முரணானவை என்றும், அவைகளை பிரதிவாதிகளோ ஸ்பஷ்ட்டமாக நிரூபிக்கவேண்டியது என்றும், 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்கள் குறித்து சட்ட விரோதமாக சில ஆவணங்களை ஏற்படுத்த முயற்சித்து வருகிறார் என்றும், எந்த நேரத்திலும் தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி விற்பனை செய்து விடக்கூடிய அச்சமும், அபாயமும் உள்ளது என்றும், அவ்வாறு 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை குறித்து ஏதாவது பராதீனத்தை ஏற்படுத்திவிட்டால் வாதிக்கு ஈடு செய்ய முடியாத கஷ்ட நஷ்டங்கள் உண்டாகும் என்றும், எனவே தாவா தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**3**). இவ்வழக்கில் பிரதிவாதிகள் அழைத்தும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால், தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டு, அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வாதி தரப்பு சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4**. இவ்வழக்கின் வாதி தன்னை **வா.சா.1** ஆக விசாரித்து, **வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.8** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் திருமதி சரோஜா என்பவர் **வா.சா.2** ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**5**) <u>**வாதியின் வழக்கின் சுருக்கம்**</u>

தாவா சொத்து ஆதியில் பெருமாள் பிள்ளை என்பவருக்கு சொந்தமான சுயார்ஜித சொத்துக்கள் என்றும், அவருக்கு வாதி, யசோதா அம்மாள், 5ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி ஆகியோர் வாரிசுகள் என்றும், வழக்கின் 1ம் பிரதிவாதி யசோதா என்பவரின் கணவர் என்றும், 2 முதல் 4 பிரதிவாதிகள்

யசோதாவின் மக்கள் என்றும், யசோதா கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பே காலமாகிவிட்டார் என்றும், பெருமாள் பிள்ளை தாவா சொத்துக்கள் குறித்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் 30.05.1969ம் தேதி காலமாகிவிட்டார் என்றும், தாவா சொத்துக்களை அவருடைய வாரிசுகளான வாதி, 5ம் பிரதிவாதி மற்றும் காலமான யசோதா அம்மாள் மக்களான 2 முதல் 4 பிரதிவாதிகளும், அவருடைய கணவரும் பாகப்பிரிவினை ஏதும் செய்யாமல் கூட்டாக அனுபவித்து வந்ததாகவும், இந்நிலையில் தாவா சொத்துக்கள் குறித்து 1ம் பிரதிவாதி பெயரில் வாதியின் தாயாரான உண்ணாமலை அம்மாள், 5ம் பிரதிவாதி, யசோதா அம்மாள் ஆகியோர் கிரய ஆவணம் எழுதி வைத்துவிட்டதாகவும், மேற்படி கிரய ஆவணத்தை அனுகூலமாக்கிக் கொண்டு 1ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதி பெயருக்கு போக்கிய உடன்படிக்கை ஆவணமும் உருவாக்கிவிட்டார் என்றும், பின்னிட்டு வாதிக்கு தாவா சொத்தில் 1/3 பாகத்தை பிரித்து அளிக்க கோரி வாதி 2 முதல் 5 பிரதிவாதிகளை அணுகி கேட்டதற்கு பிரித்துக் கொள்ள எவ்வித பதிலும் கூறாமல் உரிய பாகப்பிரிவினைக்கு உடன்படாமல் இருந்து வந்தனர் என்றும், எனவே வாதி தாவா சொத்துக்களில் தனக்குரிய 1/3 பாகத்தை பிரித்துக் கொடுக்க வலியுறுத்தி 12.03.2012ல் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார் என்றும், அதை பெற்றுக் கொண்ட பிரதிவாதிகள் 09.04.2012ல் தவறான சங்கதிகள் கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும், அதில் வாதி தனக்குரிய பாகத்தை ரூ.70,000/- பிரதிவாதிகளிடம் ரொக்கமாக பெற்றுக் கொண்டு வாச்சாவாக அவரது பாக உரிமையை விடுதலை செய்துக் கொடுத்துவிட்டார் என்றும், உறவு முறை காரணமாக பத்திரம் ஏதும் எழுதவில்லை என்றும் பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்படி சங்கதிகள் அனைத்தும் சட்டத்திற்கு முரணானவை என்றும், 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், இருப்பினும் யசோதா அம்மாளின் கணவர் என்ற முறையில் தனக்கு உரிமையில்லாத தாவா சொத்துக்களை 6ம் பிரதிவாதிக்கு போக்கிய ஆவணம் ஏற்படுத்தியுள்ளதாலும், தாவா சொத்துக்களை விற்பனை ஆவணம் ஏற்படுத்த உடந்தையாக இருந்ததாலும் அவர் தாவாவில் அவசிய

பார்ட்டியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், இறந்த பெருமாள் பிள்ளையின் மனைவியான உண்ணாமலை அம்மாள் தாவா சொத்துக்களை தனது மகள்கள் உடன் கூட்டாக அனுபவித்து வந்து கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு காலமாகி விட்டதாகவும், எனவே வாதி 2 முதல் 5 பிரதிவாதிகள் ஆகிய அனைவரும் இந்து அபிபக்த கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் என்றும், தாவா சொத்தில் வாதிக்கு 1/3 பாகமும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 1/3 பாகமும், 5ம் பிரதிவாதிக்கு 1/3 பாகமும் உரிமை உண்டு என்றும், கடந்த 27.10.1992ல் தாவா சொத்துக்களின் பாகஸ்தரான இறந்த உண்ணாமலை அம்மாள், 1ம் பிரதிவாதியின் மனைவி யசோதா அம்மாள், 5ம் பிரதிவாதி ஆகியோரிடமிருந்து 1ம் பிரதிவாதி சில சொத்துக்களை கிரயம் பெற்றார் என்றும், அந்த கிரயப் பத்திரம் தாவா சொத்துக்களின் மற்றொரு பாகஸ்தரான வாதிக்கு தெரியாமல் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், வாதி பார்ட்டியாக இல்லாத மேற்படி 27.10.1992 தேதியிட்ட கிரயப்பத்திரம் சட்டப்படி செல்லாது என்றும், அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும், மேற்படி கிரயத்தை அனுகூலமாக்கிக் கொண்டு 1ம் பிரதிவாதி 08.05.2003ல் தன்னுடைய மகளான என். சந்திரா என்பவரின் மைனர் மகனான கார்த்திகேயன் என்பவருக்கு கார்டியனாக தனது மருமகனை நியமித்து போர்ஜரியாக ஒரு கிரயப்பத்திரத்தை உருவாக்கியுள்ளார் என்றும், அந்த கிரயப்பத்திரம் செல்லாது என்றும், வாதியை கட்டுப்படுத்தாது என்றும் தாவா சொத்துக்களின் வாரிசுதாரர்கள் அனைவரும் பெண்கள் என்பதால் அதை அனுகூலமாக்கிக் கொண்டு மோசடியாக 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களின் பட்டா அனைத்தையும் பிரதிவாதி தாவா சொத்துக்கள் குறித்து சட்ட விரோதமாக சில ஆவணங்கள் ஏற்படுத்த முயற்சி செய்வதாலும் 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்கள் குறித்து எவ்வித பாராதீனத்தை ஏற்படுத்திவிட்டால் வாதிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்பட்டுவிடும் என்றும், எனவே வாதி அவருக்குள்ள 1/3 பாகம் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாகவும், அவரது பாகத்தை பாதிக்கும் வகையில் எழுதிக் கொடுத்துள்ள கிரய ஆவணத்தை செல்லாது என விளம்புகை செய்ய

வேண்டும் என்றும், தாவா சொத்துக்களில் வாதிக்கு பிரித்து சுவாதீனம் கொடுக்கும் வரை 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை விற்பனை ஏதும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார்.

**6)** இந்த வழக்கில் பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாக இருந்து வந்துள்ளார்கள். 5ம் பிரதிவாதியை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு வாதியின் தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் 28.12.1950 தேதியிட்ட பெருமாள் பிள்ளை என்பவரின் பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.1** ஆகவும், 21.03.1967 தேதியிட்ட பெருமாள் பிள்ளை என்பவரின் பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.2** ஆகவும், 30.05.1969 தேதியிட்ட பெருமாள் பிள்ளை என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் வா.த.சா.ஆ.3 ஆகவும், 1ம் பிரதிவாதி முனுசாமி பெயரில் உள்ள வந்தவாசி துணை வட்டாட்சியர் வழங்கிய பட்டா உண்மை நகல் (பட்டா எண்.22) **வா.த.சா.ஆ.4** ஆகவும், 27.10.1992 தேதியிட்ட உண்ணாமலை அம்மாள், யசோதா அம்மாள் மற்றும் மங்கை அம்மாள் ஆகியோர் 1ம் பிரதிவாதி முனுசாமி பெயருக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.5** ஆகவும், 08.05.2003 தேதியிட்ட 1ம் பிரதிவாதி தன் பேரன் கார்த்திகேயனுக்கு தாவா சொத்துக்களை பொறுத்து எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.6** ஆகவும், 12.03.2012 தேதிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.த.சா.ஆ.7** ஆகவும், 09.04.2012 தேதியிட்ட வழக்கறிஞர் பதில் அறிவிப்பு சார்வு நகல் **வா.த.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் சரோஜா என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7) தற்போது இங்கு தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி தாவாவில் கோரியுள்ளவாறு தாவா சொத்துக்களில் 1/3 பாகம் வாதிக்கு கிடைக்கவேண்டியதா? என்பதும், அவர் கோரும் பாகப்பிரிவினை பரிகாரமும் தாவா சொத்துக்கள் வாதிக்கு பாகம் கிடைக்கும் வரை சொத்துக்களை விற்பனை வில்லங்கம் எதுவும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கிரய ஆவணம் செல்லாது என்ற பரிகாரங்களும் வாதி பெற அருகதையுடைவரா என்பதேயாகும்.**

**8)** **தீர்வு**

**8.1)** தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனார் பெருமாள் பிள்ளை என்பவருக்கு பாத்யப்பட்ட சொத்துக்கள் என்பது வா.த.சா.ஆ.1 மற்றும் வா.த.சா.ஆ.2 ஆவணங்களில் மூலம் தெரிய வருகின்றது. மேற்படி வாதி தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள பொருண்மைகள் குறித்து பிரதிவாதிகள் ஆட்சேபனை ஏதும் செய்யவில்லை. பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியின் கோரிக்கையை மறுக்கவில்லை. ஆக தாவா சொத்து வாதிக்கு அவரது தகப்பனாருடைய சொத்து என்பது தெரிய வருகிறது. மேற்படி தாவா சொத்துக்களை பொறுத்து வாதியின் தகப்பனார் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் கடந்த 30.05.1969ல் காலமாகிவிட்டார் என்பது வா.த.சா.ஆ.3 ஆவணம் மூலம் தெரிய வருகிறது. தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனாருக்கு பாத்யப்பட்ட சொத்துக்கள் என்றும், அதில் எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காமல் கடந்த 1969ல் காலமாகிவிட்டார் என்றும், தாவா சொத்துக்களை பொறுத்து வாதி, அவருடைய தாயார் மற்றும் சகோதரிகள் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றும், இந்நிலையில் தாவா சொத்துக்களில் வாதிக்கும் பாகம் உள்ளதாகவும், வாதியின் தாயாரான உண்ணாமலை அம்மாள் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு காலமாகிவிட்டார் என்றும், தாவா சொத்துக்களில் வாதிக்கும், 5ம் பிரதிவாதிக்கும் மற்றும் யசோதா அம்மாள் என்பவருக்கும் 1/3 பாகம் உரிமையுள்ளது என்றும், மேற்படி யசோதா அம்மாள்

1 முதல் 4 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டதால் யசோதாவின் சொத்துக்கள் 1/3 பாகம் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு சேரத்தக்கது என்றும், இந்நிலையில் 1992ம் ஆண்டு தாவா சொத்துக்களில் சில சொத்துக்களை வாதியின் தாயாரான உண்ணாமலை அம்மாள், யசோதா அம்மாள் மற்றும் 5ம் பிரதிவாதி ஆகியோர் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்துக் கொடுத்துவிட்டார்கள் என்றும், மேற்படி கிரயம் பற்றிய விவரம் வாதிக்கு தெரியாது என்றும், அதனால் அந்த கிரயம் வாதியை கட்டுப்படுத்தாது என்றும், மேற்படி 1ம் பிரதிவாதி கிரய ஆவண முன்னிலைக்கு தாவா சொத்துக்களை பொறுத்து 6ம் பிரதிவாதிக்கு போக்கியம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி சங்கதிகளை அறிந்த வாதி தாவா சொத்துக்களில் தனக்கும் 1/3 பாகம் பங்கு உள்ளது என கோரி பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதற்கு பொய்யான சங்கதிகளை கூறி பிரதிவாதிகள் வாதிக்கு பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், இந்நிலையில் 2003ம் ஆண்டு 1ம் பிரதிவாதி அவரது மகள் வயிற்று பேரனுக்கு தாவா சொத்துக்களை கிரய ஆவணம் எழுதி வைத்துவிட்டார் என்றும், தாவா சொத்துக்களுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்றும், எனவே தாவா சொத்துக்களில் 1/3 பாகம் வாதிக்கு சேரத்தக்கது என்றும், 1/3 பாகத்தை பிரித்துக் கொடுக்கக்கோரியும், தாவா சொத்து சுவாதீனம் வாதிக்கு கிடைக்கும் வரை 1ம் பிரதிவாதி சொத்துக்களை பொறுத்து எவ்வித பாராதீனமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது, செல்லத்தக்கதல்ல என்றும், பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்ததோடு, வாதி தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞரும் அவ்வாறே வாதிட்டார்.

**8.2**). தாவா சொத்து வாதி, 5ம் பிரதிவாதி மற்றும் யசோதா அம்மாள் ஆகியோருக்கு கூட்டுக் குடும்பமாக பாத்யப்பட்ட சொத்துக்கள் என்றும், யசோதா அம்மாள் காலமான பிறகு அவரது சொத்துக்கள் அவருடைய

வாரிசுகளான 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு சேரத்தக்கது என்றும் வாதி வழக்குரையிலும் சாட்சியத்திலும் குறிப்பிட்டுள்ளார். மேலும் வாதி தரப்பில் சரோஜா என்பவரும் வாதியின் வழக்குரையை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு இருக்கும்பட்சத்தில், கூட்டு குடும்ப அங்கத்தினர்களான வாதியின் தாயாரான காலமான உண்ணாமலை அம்மாள், யசோதா அம்மாள், 5ம் பிரதிவாதி ஆகியோர் 1ம் பிரதிவாதிக்கு 1992ல் வா.த.சா.ஆ.5 ஆவணத்தை எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. மேற்படி தாவா சொத்தின் கூட்டுக் குடும்ப அங்கத்தினர்களான வாதி, 5ம் பிரதிவாதி மற்றும் யசோதா அம்மாளின் வாரிசுகளான 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் தலா 1/3 பாகம் ஏற்படுகிறது. இந்நிலையில், உண்ணாமலை அம்மாள் காலமாகிவிட்டார், யசோதா அம்மாளும் காலமாகிவிட்டார். ஆனால் யசோதா அம்மாள் ஆவணம் ஏதும் எழுதி வைக்காமல் காலமாகிவிட்டார். எனவே அவருடைய பாகத்தை பொறுத்து கிரய ஆவணமானது செல்லும் தன்மை உடையதாகும். மேலும் உண்ணாமலை அம்மாளும் காலமாகிவிட்டார். மேற்படி ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், ஆவணத்தில் 3ம் தரப்பினரான மங்கை (5ம் பிரதிவாதி) என்பவரின் திருமண செலவிற்காக என்று குறிப்பிட்டுள்ளபட்சத்தில், 5ம் பிரதிவாதியின் பாகத்தை பொறுத்தும் செல்லும் தன்மையுடையது ஆகும், மேலும் தாவா சொத்துக்களை பொறுத்து கூட்டுக் குடும்ப அங்கத்தினர் அடிப்படையில் தற்போது வாதியும், 5ம் பிரதிவாதியும் மற்றும் யசோதா அம்மாளின் வாரிசுகளான 1 முதல் 4 பிரதிவாதிகள் மட்டுமே உள்ளனர். எனவே தாவா சொத்தானது மூன்றாக பிரிக்கப்பட்டு வாதிக்கு 1/3 பங்கும், 5ம் பிரதிவாதிக்கு 1/3 பங்கும் யசோதா அம்மாளின் வாரிசுகளான 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 1/3 பங்கும் கிடைக்கக்கூடியது ஆகும். மேலும் 1992 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள வா.த.சா.ஆ.5 ஆவணமானது யசோதா அம்மாள், உண்ணாமலை அம்மாள் மற்றும் 5ம் பிரதிவாதி ஆகியோர் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளனர் என்பது மேற்படி ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது. வா.த.சா.ஆ.7 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பு, வா.த.சா.ஆ.8 ஆவணமான பதில் அறிவிப்பை இந்நீதிமன்றம் பரிசீலனை

செய்கையில், தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்கள் என்பது பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தாவா சொத்துக்களை பொறுத்து வாதி வாச்சாவாக ரூ.70,000/- பெற்றுக் கொண்டு விடுதலை செய்து வைத்துவிட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த வழக்கில் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து அவர்களது எதிர்வாதத்தை முன்வைக்காததால் வாதியின் வழக்குரையை பிரதிவாதிகள் ஏற்றுக் கொண்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதவேண்டியுள்ளது. மேலும் வா.த.சா.ஆ.5 ஆவணமானது 5ம் பிரதிவாதி மற்றும் யசோதா அம்மாள் எழுதிக் கொடுத்துள்ள நிலையில், யசோதா அம்மாளின் வாரிசுகளான 1ம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் உள்ள நிலையில் மேற்படி வா.த.சா.ஆ.5 ஆவணமான கிரய ஆவணம் செல்லத்தக்கதல்ல என முழுமையாக கூறிவிட முடியாது. வாதியின் 1/3 பாகத்தை பொறுத்து கட்டுப்படுத்தக் கூடியதல்ல என்றே தீர்மானித்தும், அதேபோல், மேலும் தாவா சொத்துக்கள் பிதுராஜ்ஜிய சொத்துக்களாக இருந்தாலும், பெருமாள் பிள்ளைக்கு தனிப்பட்ட சொத்துக்களாக இருந்தாலும் இந்து வாரிசுரிமை சட்டப்படி வாதிக்கும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும், 5ம் பிரதிவாதிக்கும் தலா 1/3 பாகம் உள்ளது. ஆனால் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள வா.த.சா.ஆ.5 ஆவணமான கிரய ஆவணம் மற்றும் வா.த.சா.ஆ.6 ஆவணமான கிரய ஆவணமும் செல்லக்கூடியதல்ல என பரிகாரம் கோரப்பட்டுள்ளது. அந்த கோரிக்கையை பிரதிவாதிகள் மறுக்க முன்வரவில்லை. எனவே வாதியின் கோரிக்கையை மறுப்பதற்கு போதுமான காரணங்கள் இல்லை. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1, வா.சா.2 ஆகியோரின் சாட்சிகள்படியும், வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.8 வரை உள்ள ஆவணங்கள்படியும், தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனார் சொத்து என்பதும், அதில் வாதிக்கு 1/3 பாகம் உள்ளது என்பதும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

**8.3)** எனவே வாதி வழக்கில் கோரும் முதல்நிலை தீர்ப்பாணையை அடைய அருகதை உடையவர் எனவும், மேலும் தாவா சொத்தில் வாதிக்கு தெரியாமல் வா.த.சா.ஆ.5 ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளதால் தாவா சொத்தில் வாதிக்கு 1/3 பாகம் உள்ள நிலையில், 1ம் பிரதிவாதி எவ்வித விற்பனை, வில்லங்கம் செய்ய அவருக்கு உரிமையில்லை. எனவே, வாதி, 2 முதல் 5 பிரதிவாதிகளின் பாக சொத்தை பொறுத்தவரை 1ம் பிரதிவாதி வில்லங்க பாராதீனமும் செய்யாமல் இருக்கும் பொருட்டு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும், 27.10.1992 தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு உண்ணாமலை அம்மாள், யசோதா அம்மாள் மற்றும் 5ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் வாதியின் 1/3 பாகத்தை பொறுத்து கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றும் தீர்மானித்து இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**9. முடிவாக,**

**இந்த வழக்கு அனுமதிக்கப்படுகிறது.**

**i) தாவா செட்டியுல் சொத்துக்களை 2 முதல் 5 பிரதிவாதிகள் நலம் தீது கலந்து 3 பாகங்களாக பிரித்து அதில் 1/3 பங்கை வாதிக்கு ஒதுக்கி தனி சுவாதீனம் ஒப்படைக்கவேண்டியது என்று ஒரு முதல் நிலை தீர்ப்பாணையும், அவ்வாறு இந்த தீர்ப்பு தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் செய்து முடிக்க வேண்டியது என்றும்,**

**ii) வாதி மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகள் இடையே தக்க பாகப் பிரிவினை முடியும் வரை தாவா செட்டியுல் சொத்துக்களை குறித்து 1ம் பிரதிவாதி எவருக்கும் யாதொரு பாராதீனமும் செய்யக் கூடாது என ஒரு நிரந்தர தடை உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும்,**

**iii) 27.10.1992 தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு உண்ணாமலை அம்மாள், யசோதா அம்மாள் மற்றும் மங்கை அம்மாள் (5ம் பிரதிவாதி) எழுதிக் கொடுத்து வந்தவாசி சார்பதிவக பதிவு ஆவண எண்.2052/1992 ஆவணம் வாதியின் 1/3 பாகத்தை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றும்,**

**iv) உபய வாதிகளுக்கு இடையே உள்ள உறவுமுறையை கருத்தில் கொண்டு அவரவர்களது செலவுத் தொகைகளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டியது என்றும், தாவா அனுமதிக்கப்பட்டு தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது.**

**இந்த வழக்கு பாக வழக்கு என்பதால் மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்படி இறுதிநிலை தீர்ப்பாணைக்கு 17.07.2026 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHALAKSHMI C
Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.04.17 17:26:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.

**வாதி தரப்பு சாட்சிகள்**

1. வா.சா.1. திருமதி. நீலாம்பாள் (வாதி)
2. வா.சா.2 திருமதி சரோஜா

**வாதி தரப்பு சான்றாவணங்கள் -**

| வ. எண் | சான்றாவணங்களின் எண்ணிக்கை | தேதி | விவரம் | ஷரா |
|---|---|---|---|---|
| 1. | வா.த.சா.ஆ.1. | 28.12.1950 | தேதியிட்ட வாதியின் தகப்பனார் பெருமாள் பிள்ளை பெயரில் உள்ள கிரயப்பத்திரம் | சான்றிட்ட நகல். |
| 2. | வா.த.சா.ஆ.2. | 21.03.1967 | தேதியில் வாதியின் தகப்பனார் பெருமாள் பிள்ளை பெயரில் உள்ள கிரயப் பத்திரம் | சான்றிட்ட நகல். |
| 3. | வா.த.சா.ஆ.3. | 30.05.1969 | தேதியிட்ட வாதியின் தந்தை பெருமாள் பிள்ளையின் இறப்பு சான்று. | அசல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | வா.த.சா.ஆ.4. | 06.03.2012 | தேதியிட்ட வந்தவாசி துணை வட்டாட்சியர் 1ம் பிரதிவாதி பெயரில் வழங்கிய பட்டா. (பட்டா எண்.22) | உண்மை நகல் |
| 5. | வா.த.சா.ஆ.5. | 27.10.1992 | தேதியிட்ட தாவா சொத்துக்களை உண்ணாமலை அம்மாள், யசோதா அம்மாள் 5ம் பிரதிவாதி ஆகியோர்களிடம் இருந்து 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற கிரயப் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| 6. | வா.த.சா.ஆ.6 | 08.05.2003 | தேதியிட்ட 1ம் பிரதிவாதி அவருடைய பேரன் கார்த்திகேயனுக்கு கார்டியன் நியமித்து தாவா சொத்துக்களை கிரயம் ஏற்படுத்திக் கொடுத்த கிரயப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| 7. | வா.த.சா.ஆ.7. | 12.03.2012 | தேதியிட்டு வாதி தரப்பில் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| 8. | வா.த.சா.ஆ.8 | 09.04.2012 | தேதியிட்ட பிரதிவாதிகளின் வழக்கறிஞர் வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு | சார்வு நகல். |

<u>**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்**</u> - இல்லை

<u>**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**</u> - இல்லை

MAHALAKSHMI C

Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.04.17 17:26:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.